
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1294

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

77

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

## மத நல்லிணக்கமே, கழகத்தின் கண்கள்!

**2-8-1996** அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நடந்த இரட்டைக்கொலை வழக்கு சட்டமன்றத்தில் விவாதம். கொல்லப் பட்டவர்கள் கிறிஸ்தவர்கள். குற்றத்தில் ஈடுபட்ட தரப்பு இந்துக்கள் என்பதால், அது மதச் சிக்கலாக மாறும் அபாயம் இருந்தது. ஏனென்றால், ஏற்கெனவே கன்னியா குமரி மாவட்டத்தில், 1982-ஆம் ஆண்டுவாக்கில் ஏற்பட்ட ‘மண்டைக்காடு கலவரம்’ ஏற்படுத்திய பாதிப்பினைத் தமிழ்நாடு அறியும். அப்படியான சூழலில், இந்த மோதல் தொடர்பாக, சட்டமன்றத்தில் பதற்றத்தைத் தணிக்கும் வகையில் பதிலளித்தார், முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர்.

“தமிழ்நாட்டில் மதவெறி தலைதூக்கக் கூடாது. மதத்திலே அவரவர்களுக்குப் பற்று இருப்பது என்பது வேறு, அது வெறியாக மாறி, இன்னொரு மதத்தைத் தாக்குவது என்பது வேறு என்பதை நாம் நன்கு உணர்ந்து இருக்கிறோம். தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் மற்றும் திராவிட இயக்கமும், சமதர்மத்திலும் சமூக நலத்திலும் அக்கறை கொண்டுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் போன்ற இயக்கங்களும், பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் வளர்க்கப்பட்ட காங்கிரஸ் பேரியக்கமும்,அந்த இயக்கத்திலே உள்ளவர்களும் தமிழ்நாட்டிலே ஓர் அமைதி நிலவ வேண்டும் என்பதற்காக பெரும்பாடுபட்டிருக்கிறார்கள்.

இஸ்லாமியர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையிலே மோதல் ஏற்படக் கூடாது, அவர்கள் சகோதரர்களாக வாழ வேண்டும் என்ற அந்தக் கடமை உணர்ச்சியை, கண்ணிய உணர்ச்சியை, கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் போன்றவர்கள் போதித்து இருக் கிறார்கள். எனவே, இந்த மண் அப்படிப்பட்ட பெரியவர்களால் பண்படுத்தப்பட்ட மண். இந்த மண்ணில் மதக்கலவரங்களுக்கு இடமில்லை. கடவுள் பெயராலோ, மதத்தின் பெயராலோ வன்முறையை யார் தூண்ட முயன்றாலும் அவர்கள் கடுமையாக அடக்கி ஒடுக்கப்பட வேண்டும் என்பதில், இந்த அரசு நிச்சயமாக முன் நிற்கும்” என்று பதிலளித்தார்.

தமிழ்நாட்டில் நல்லிணக்கச்சூழல் நிலவுவதற்கான கழகத்தின் ஆணித்தரமான நிலைப்பாட்டை விளக்கியது, கலைஞரின் இந்தப் பதில். இது ஆளுங்கட்சியாக இருந்தால் மட்டுமல்ல, எதிர்க்கட்சியாக இருந்தாலும் இதே நிலைபாட்டைத்தான் கழகம் கொண் டிருந்தது. எதிர்க்கட்சியாக இருந்த வேளைகளில், அரசியலுக்காக இத்தகைய நிலைப்பாடுகளைக் கழகம் மாற்றிக்கொண்டதில்லை.

### மாவட்டக் கழகத்தினர்

பேரறிஞர் அண்ணா காலத்தில், அச்சிறுப்பாக்கத்தில் மசூதி கட்டும்போது உருவான பதற்றத்தை, அண்ணா நேரடியாகத் தலையிட்டு, சூழலை இயல்பாக்கியதை முந்தைய அத்தியாயங்களில் தொட்டிருப்போம். அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் சிறுபான்மையினருக்கு அரணாக நின்றுள்ளார். ஆளுங்கட்சியாக இருந்தபோது மட்டுமல்ல; எதிர்க்கட்சியாக இருந்தபோதும், சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு அரண், கழகம்தான் என்பதை 1982-இல், கன்னியாகுமரியில் ஏற்பட்ட மண்டைக்காடு கலவரமும் சொல்லும்.

ஊர்வலப் பாதை மற்றும் ஒலிபெருக்கி தொடர்பான சிறு தகராறு, கடலோர மீனவர்களின் பொருளாதாரத்தையே சிதைத்தது. உள்ளூர் அரசியல் மற்றும் வெளியிலிருந்து உருவான மத அடையாள அரசியல் ஆகியவை ஒன்றோடொன்று கலந்த பின்னணியில் அந்த வன்முறை நிகழ்ந்தது. அப்போது நடந்த துப்பாக்கிச் சூட்டில்



ஆறு பேர் உயிரிழந்தனர்; 21 பேர் தீவிரமாகக் காயமடைந்தனர். அந்த மோதல், மண்டைக்காட்டைத் தாண்டி கடலோரக் கிராமங்களுக்கும் பரவியதில், வீடுகள், கடைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் தாக்கப்பட்டன. மீன்பிடி வலைகள் மற்றும் படகுகள் சேதப்படுத்தப்பட்டன. அன்றைய, எம்.ஜி.ஆர். தலைமையிலான அ.தி.மு.க. அரசு சட்டம்-ஒழுங்கினைக் கட்டுப்படுத்துவதில் தோல்வியைக் கண்டிருந்த நிலையில், அங்கு நிலவிய பதற்றத்தைத் தணிக்க, மாவட்டக் கழகத்தினரைக் களமிறக்கினார், அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர். அதனால், இதில் அரசியல் ஆதாயம் தேடுகிற எந்த முயற்சியையும் அவர் அனுமதிக்கவில்லை. மக்களை அமைதிப்படுத்த மாவட்டக் கழகத்தின் சார்பில் ஒற்றுமைப் பொதுக்கூட்டங்களை நடத்த வைத்தார்.

அந்த நிகழ்வு தொடர்பாக, சட்டப்பேரவையில் விவாதிக்க வேண்டுமென்று வலியுறுத்தியவர், கழகத்தின் சட்ட மேலவை உறுப்பினர் ம.சங்கரலிங்கம். ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்து, அது தொடர்பாக அவர் ஆற்றிய உரைதான், கழகத்தின் நிலைப்பாடு.

“கன்னியாகுமரி மாவட்டத்தில், பிற பகுதிகளில் இல்லாததுபோல், எல்லா மதங்களையும் சேர்ந்தவர்கள் மிகுந்த ஒற்றுமை உணர்வோடு எல்லாக் கோயில்களுக்கும் சென்று வழிபடுவார்கள். இந்துக்கள், கிறிஸ்தவக் கோயிலுக்குச் செல்வார்கள்; கிறிஸ்தவர்கள் இந்துக் கோயிலுக்குச் செல்வார்கள். அப்படி வழிபடுகிற முறை இருந்தது. அங்கு வாழ்கிற மக்களுடைய ஒற்றுமை உணர்வை உலகுக்கே எடுத்துக் காட்டும். மண்டைக்காடு அம்மன் கோயில் என்பது பகவதி அம்மன் கோயில். கேரளாவில் உள்ள பல இலட்சக்கணக் கான மக்கள் அங்கே வருகிறார்கள். அவர்கள் கால்நடையாகவே வருகிறார்கள். வருகிறபோது, முஸ்லிம் பள்ளிகளுக்குச் சென்று காணிக்கை போடுகிறார்கள். கிறிஸ்த்தவக் கோயில்களுக்குச் சென்று காணிக்கை போடுகிறார்கள். பிறகு இந்துக் கோயிலுக்கும் சென்று வணங்கிவிட்டு, கடற்கரைக் கோயிலுக்கும் சென்று காணிக்கை போட்டுச் செல்லுவார்கள்.

இப்படி ஒற்றுமையாக வாழும் மக்கள், இன்று சண்டை போடுகிறார்கள். திங்கள்சந்தை என்ற இடத்தில், திருவிழா நடைபெற்றபோது, 22-ஆம் தேதி ஒரு சம்பவம் நடைபெற்றது. அதன் மூலம் ஒரு பதற்றநிலை ஏற்பட்டது. அப்படி இருக்கும்போது, 1-ஆம் தேதி நடைபெற இருந்த திருவிழாவில், அரசு முன்னெச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டும். ஆனால், அப்படி இருக்க வில்லை. அங்கு வாழ்கிற எல்லா மக்களும் அன்போடும் பணிவோடும் அவர்கள் முன்பு வாழ்ந்தது போல் இப்போதும் சகோதரர்களாக வாழ வேண்டும். ஒரே வீட்டில் இந்துவும் கிறிஸ்தவரும் இருக்கக்கூடிய குடும்பங் களைக் கொண்டது கன்னியாகுமரி மாவட்டம். கன்னியாகுமரி மக்களுக்கு அன்புடனும் பணிவுடனும் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன்” என்று மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இந்த நிகழ்வு குறித்து ஓய்வுபெற்ற நீதிபதியை நியமித்து விசாரணை நடத்த வேண்டுமென்றும் வலியுறுத்தியவர் அவர்தான்.

மிக முக்கியமாக, கலவரப் பகுதிகளைப் பார்வையிடச் சென்ற எம்.ஜி.ஆர்., மாவட்டக் காவல் துறை உயர் அதிகாரிகளிடம் “தி.மு.கழகத்தின் மாவட்டச் செயலாளர் திரவியம் அவர்களோடும் ஆலோசித்துச் செயல்படுங்கள்” என்று குறிப்பிட்டுள்ளார். அந்த அளவுக்கு கழகத்தினர் இவ்விவகாரத்தை உணர்வுபூர்வமாகக் கையாண்டுள்ளனர்.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும், அமைதியை நிலைநாட்டவும் மேற்கொள்ளப் பட்ட அனைத்து முயற்சிகளுக்கும் இந்த அமைதிப் பேரணிகளுக்கும் எதிர்க்கட்சித் தலைவரான கலைஞர் முழு ஒத்துழைப்பையும் அளிப்பதில் முன்னிலையில் இருந்தார்.

அதேநேரத்தில், அந்த நிகழ்வு தொடர்பாக விசாரித்த நீதியரசர் பி.வேணுகோபால் ஆணையம் அளித்த பரிந்துரைகளில், ‘ஒரு வழிபாட்டுத் தலத்திலிருந்து மற்றொரு வழிபாட்டுத் தலத்திற்கு இடையே குறைந்தது 100 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும். புதிய வழிபாட்டுத் தலங்கள் கட்ட மாவட்ட ஆட்சியரின் தடையில்லாச் சான்றிதழ் (NOC) கட்டாயம். ஒலிபெருக்கிகள் பிற மதத்தினருக்கு இடையூறாகவோ ஒலி மாசுவை ஏற்படுத்தும் வகையிலோ பயன்படுத்தப்படக் கூடாது. ஆசைவார்த்தைகள் காட்டியோ அல்லது அச்சுறுத்தியோ மதம் மாற்றுவதைத் தடை செய்ய சட்டம் இயற்றலாம்’ என்று குறிப் பிட்டது.

அதை அப்போதே கடுமையாக எதிர்த்தார் கலைஞர். பின்னாளில், இதை அடிப்படையாகக் கொண்டுதான் ஜெயலலிதா அரசு மதமாற்றத் தடைச்சட்டத்தை இயற்றத் துணிந்தது. அப்போதும் எதிர்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

> “ஜெயலலிதா அரசு மதமாற்றத் தடைச்சட்டத்தை இயற்றத் துணிந்தது. அப்போதும் எதிர்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.”

...நீளும்

## காந்தி மீது, ஏன் இத்தனை வன்மம்?



**ஊ**ரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் இடம்பெற்றிருந்த காந்தியின் பெயரை நீக்கி விட்டு, 150 நாட்கள் வேலை வாய்ப்பு அளிக்கப் போகிறோம் என்றது ஒன்றிய அரசு. ஆனால், அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யாமல் திட்டம் தோல்வியை நோக்கி செல்வதாகப் புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. காந்தி மீது ஏன் இந்த வன்மம் எனக் கேள்வி எழுப்பியுள்ளார், பேராசிரியர் மு.நாகநாதன்.

“ஆகஸ்ட் 15-ஆம் நாளில், இந்தியப் பிரதமர் நரேந்திரர் என்ன உரை நிகழ்த்தினார் என்று, ஆகஸ்ட் 16-ஆம் நாளில் வெளிவந்த ஏடுகளைப் புரட்டினால், அதிர்ச்சிதான் மேலோங்கியது. 80-ஆம் ஆண்டு விடுதலை நாளில், உத்தமர் காந்தி முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு, நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ், கப்பல் ஓட்டிய தமிழன் வ.உ.சி, இளம் வயதில் பெரும் தியாகம் செய்து தூக்கிலிடப்பட்ட மாவீரன் பகத்சிங் போன்றோர் ஆற்றிய அருந்தொண்டுகளை, அர்ப்பணிப்புகளைச் சில வரிகளிலாவது நினைவுகூராதது பிரதமர் நரேந்திரரின் அறியாமையா, ஆணவமா, அலட்சியமா? என்பதை எந்த ஏடும் குறிப்பிடவில்லை.

ஏனென்றால், 80 ஆண்டுகள் என்பது ஒரு நாட்டின் வரலாற்றுப் பதிவில் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். பிரதமர் நரேந்திரர் அணிந்து வந்த வண்ண வண்ண 13 தலைப்பாகைகளை எல்லா ஏடுகளும் வெளியிட்டிருந்தன. மன்னர் ஆட்சிக்காலத்து அரசாள்வோரின் தோற்றம்.

கடந்த 13 ஆண்டுகளில், பா.ஜ.க. ஒன்றிய ஆட்சி நாட்டிற்குச் செய்தது என்ன? வரும் ஆண்டுகளில் செய்யப்போவது என்ன? என்று குறிப்பிட்டிருக்கலாம். ஆனால், பிரதமராகிய நீங்களோ ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் இடம்பெற்றிருந்த காந்தியின் பெயரை நீக்கிவிட்டுக் கொடி ஏற்றுகிறீர்கள். காந்தியின் மீது எத்தகைய வன்மம்?’ என்று விமர்சனம் செய்துள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



வி.என்.ஷாஜகான்



### காலம் மாறும், கழக உணர்வு மாறாது!

1983-ஆம் ஆண்டு இளைஞர் அணி சார்பில், அன்றைய கோவை மாவட்டம் உடுமலைப்பேட்டையில், பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது, உடுமலைப்பேட்டை நகர இளைஞர் அணி துணை அமைப்பாளராக இருந்தேன். நிகழ்ச்சிக்கு வருகைதந்த அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்து வரவேற்பு அளித்தேன். பின்னர், நகர அமைப்பாளராகவும் இளைஞர் அணியில் பொறுப்பு வகித்துள்ளேன். அடுத்த படம், 2024- ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது, திருப்பூர் வருகைதந்த கழகத் தலைவரைச் சந்தித்து மகிழ்ந்தபோது எடுத்தபடம்.

**- வி.என்.ஷாஜகான், உடுமலைப்பேட்டை, மாவட்டச் சிறுபான்மை நல உரிமைப் பிரிவு அமைப்பாளர், திருப்பூர் தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### பட்டம், பதவி விரும்புபவர்களல்ல!

1950-ஆம் ஆண்டு, ‘ஆரிய மாயை’ நூலுக்காக அண்ணா கைதுசெய்யப்பட்டு விடுதலையானபோது, நுங்கம்பாக்கத்தில் பிரம்மாண்ட பொதுக்கூட்டம் நடைபெற்றது. ‘நிலவு அச்சக’ உரிமையாளர் பூ.கணேசன் தலைமை தாங்கிய அந்தக் கூட்டத்தில், அண்ணா உரையாற்றினார். “நாங்கள் சட்ட வரம்புக்கு உட்பட்டு நடக்க வேண்டும் என்று விரும்புபவர்கள். சட்டத்தின் மேன்மை எங்களுக்குத் தெரியும். அமைதியின் அவசியத்தை ஆளவந்தாரை விட நன்றாக அறிவோம். அமைதியும் ஒழுங்குமே உருவான எம்மை, ஆளவந்தாரே! வெளியே துரத்தாதீர்! ஆத்திரமுண்டாகும்படித் தூண்டாதீர்! நாங்கள் பதவி, பட்டம் விரும்புபவர்களல்ல. மற்ற அரசியல் கட்சிகள் செல்லும் பாதை அல்ல எம்முடையது” என்று வரலாற்று உரை நிகழ்த்தினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900